# Path to Dharma

## ௐதர்ம நெறிௐ



## News Letter 16 செய்தி மடல்



ஷேத்திர(வயல்)விநாயகர் ஆலயம்,

ஸ்ரீ முன்னேஸ்வரம், சிலாபம், இலங்கை.

**Edited by: B.S.Sarma,**

**Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.**

hot mail; kshethravinayaka@yahoo.com: munneswaram@yahoo.com

**Sri Sankar Publications**

**APRIL 2009** ஏப்ரல்

**திகடசக்கரத் செம்முக மைந்துளான்**
**சகடசக்கரத் தாமரை நாயகன்**
**அகட சக்கர வின்மணி யாவுரை**
**விகடசக்கர மெய்ப்பதம் போற்றுவாம்**

# ஸ்ரீ முன்னேஸ்வர ஷேத்திர(வயல்) விநாயகர் ஆலய புனராவர்தன ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம்.

## ஸ்ரீ முன்னேஸ்வர ஷேத்திர(வயல்) விநாயகர் ஆலய வரலாறு.

வரலாற்றுப் பெருமை மண்டிக்கிடக்கும் ஸ்ரீமுன்னேஸ்வரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னநாத கோயிலைச் சுற்றிச் சில கோயில்கள் அமைந்து உள்ளன.

முன்னநாதர் கோயிலின் தென்மேற்குத் திசையில் உள்ள வயல் நடுவே சிறிய ஷேத்திர(வயல்) விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. முன்னேஸ்வரம் கிராமத்தின் வயல் மத்தியில் அமைந்துள்ள இந்த சிறிய ஆலயத்தில் கோயில் கொண்டெழுந்தருளி அனைவருக்கும் அருள்பாலிக்கும் ஷேத்திரவிநாயகர் பொதுவாக களத்துப் பிள்ளையார், வயல் விநாயகர் என்றெல்லாம் அழைக்கப்படுவார். பொதுமக்கள் அனைவரும் எவ்வித வேறுபாடுகளுமின்றி இவ்வாலயத்தைத் தரிசித்து வழிபாடுகள் செய்வர்.

ஸ்ரீ முன்னைநாதர் ஆலயத்தில் நடைபெறும் அதிவிசேட பூஜைகளின் ஆரம்பத்தின்போதும், வருடாந்த கொடியேற்றத் திருவிழாவுக்கு முந்திய கர்மாரம்ப நாளன்றும். இவ்விநாயகருக்கு விஷேச அபிஷேக ஆராதனைகளும், சிறப்பான பூஜை, புனஸ்கார வழிபாடுகளும் இடம் பெறுவது வழக்கம். இப்பூஜைகளை ஸ்ரீ முன்னைநாதர் ஆலயத்தில் கொடியேற்றும் பிரதம சிவாச்சாரியரே முன்னின்று நடத்துவது சிறப்பான அம்சமாகும். இவ்வாறே பெரிய கோயிலில் அதிவிஷேச விழாக்களை முன்னின்று நடத்தும் பிரதம சிவாச்சாரியரே, அந்த விழாக்களின் பூர்வாரம்பக் கிரியையாக இவ்விநாயகருக்கு வழிபாடுகள் நடத்துவது முக்கியமான அம்சங்களிலொன்றாகக் கருதப்பட்டு தொன்று தொட்டு நிலவி வரும் சம்பிரதாயமாகும்.

போர்த்துக்கேயர் மேற்கொண்ட அழிப்பு நடவடிக்கைகளினால் அட்டகாசத்தினால் பல இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்ட போது இவ்வாலயமும் அழிக்கப்பட்டது. வடிவாம்பிகா சமேத முன்னநாதர் ஆலயத்தில் கி.பி. 1889 ஆம் ஆண்டு இடம் பெற்ற லட்ச தீப மகோற்சவத்தின் போதும், வயல் நடுவே வீற்றிருக்கும் ஷேத்திரவிநாயகருக்கு, விக்கினங்களை விலக்குமாறு பூஜை, அபிஷேகம், ஆராதனை ஆகியவை நடத்தப்பட்டு முதலாவது தீபம் ஏற்றப்பட்டு வழிபாடுகள் இடம் பெற்றன. (ஸ்ரீமுன்னேஸ்வர வரலாறு பக்கம் 63 ஐப்பார்க்க)

பிலவ வருடம் ஐப்பசி மாதம் ஏழாந்திகதி முதல் (23-10-1961) பிலவ வருடம் தை மாதம் இருபத்து மூன்றாம் திகதி வரை (5-2-1962) நூற்றி எட்டுத் தினங்கள் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னநாத சுவாமி கோயிலில் இடம் பெற்ற கோடியர்ச்சனையின் பூர்வாங்கக்கிரியையாக வயல் வெளியில் அமைந்துள்ள விநாயகருக்கு விக்கினங்கள் அகல, நூற்றி எட்டுத் தேங்காய்களை சிதறு காய்களாக உடைத்து பூஜை, அபிஷேக அலங்கார வைபவங்கள் கோடியர்ச்சனையை நடாத்தும் சிவாச்சாரியர்களால் பிலவ வருடம் ஐப்பசி மாதம் ஆறாம் திகதி (22-10-1961) யன்று நடத்தப்பட்டது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் சோபகிருது வருஷம் ஆனிமாதம் பதினேழாந்திகதி (01-07-1963) யன்று ஸ்ரீ வடிவாம்பிகாசமேத முன்னநாத சுவாமிக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்கும்பாபிஷேகத்தின் பூர்வாங்கக்கிரியையாக சோப கிருது வருடம் ஆனிமாதம் எட்டாந்திகதி வயல் வெளியில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள விநாயகருக்கு நூற்றியெட்டுத் தேங்காய்களைச் சிதறு காய்களாக உடைத்து, கும்பாபிஷேக கர்மாரம்பம் தொடக்கம், திருக்கல்யாண உற்சவம் ஈறாக யாவும் மங்களகரமாக நிறைவேற வேண்டுதல் செய்து விசேட பூஜைகள், அபிஷேகங்கள், தானங்கள் முதலியவை நடத்தப்பட்டன. இவ்வாறே அடுத்தடுத்து இடம்பெற்ற கும்பாபிஷேகங்களின் போதும், மற்றும் விசேட வைபவங்களின் போதும் இவ்விநாயகருக்கு வழிபாடுகள் இடம்பெற்றன.

குரோதி வருஷம் பங்குனிமாதம் பதினாறாம் திகதி (29.03.1965) முதல் விசுவாவசு வருஷம் வைகாசி மாதம் பதினெட்டாம் திகதி வரை ஸ்ரீ வடிவாம்பிகாசமேத முன்னநாதர் கோயிலில் நடைபெற்ற மிருத்தியுஞ்ச மகாயாகம் இடையூறின்றி இனிதே நடைபெறுவதற்காக வயல்வெளியில் உள்ள இவ்விநாயகர் ஆலயத்தில் 28.3.1965 ஆண்டு 108 தேங்காய் சிதறு காய்களாக உடைக்கப்பட்டு விசேட அபிஷேகபூஜை, அலங்கார ஆராதரனைகள், அன்னதானம் முதலியவை, மிருத்தியுஞ்ச மகாயாகம் செய்த சிவாச்சாரியர்களால் நடத்தப்பட்டன.

ஆதியில் இவ்வயல்பகுதியில் இருந்த கர்ப்பக்கிருக விநாயகர் சிலை போர்த்துக்கேயரால் சேதப்படுத்தப்பட்டது. பின்னர் சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ வடிவாம்பிகாசமேத முன்னைநாதர் ஆலயத்தின் மகா மண்டபத்துக்கு வெளியே அமைந்திருந்த விநாயகர் சிலையை அக்கோயில் சிவாச்சாரியார்கள் தம்பட்டம்,மேள,தாள,சங்கு,சேகண்டி போன்ற இன்னிசை வாத்தியங்கள் முழங்க யானையின் மீதமர்த்தி, உரிய தேவஸ்தான மரியாதைகளுடன் ஊர்வலமாகக் கொண்டு சென்று தற்போதைய இடத்தில் அரச மரநிழலில் பிரதிஷ்டைசெய்தனர்.

அரச மரத்தடியில் மருத மரங்களின் சூழலில் இருந்த விநாயகருக்கு மக்கள் பூஜை, புனஸ்காரங்கள், செய்து நைவேத்தியமாக கடலை,மோதகம்,கொழுக்கட்டை,லட்டு, சர்க்கரைப் பொங்கல் போன்றவற்றைக் கோயில் முன்றலிலேயே தயாரித்து நிவேதனமாகப் படைத்து வழிபட்டனர்.

மக்கள் அனைவருக்கும் கண்கண்ட தெய்வமாக, நம்பிக்கையுடன் வழிபட்டோருக்கு அனுக்கிரகம் அளிக்கும் தெய்வமாக இவ்விநாயகப் பெருமான் விளங்கிவருகிறார். மக்கள் தாம் எண்ணிய கருமம் நிறைவேறியவுடன், செய் நன்றி உணர்வோடு கடனாக இவ்விநாயகப் பெருமானுக்கு நேர்த்திகளை நிறைவேற்றி வருகின்றனர்.

இவ்விநாயகரைப் பற்றிப் பல தெய்விக அனுபவங்களையும், எடுத்த கருமம் செவ்வனே நிறைவேற இவ்விநாயகப் பெருமான் அருளிய அனுபவங்களையும் வார்த்தைகளால் சொல்லியடங்கா.சிறிது காலத்தின் பின் இந்த ஊரிலிருந்த இந்து சமய குருமார்களின் அனுசரணையாலும் பொது மக்களுடைய முயற்சியாலும் ஒரு சிறு கோயில் கட்டப்பட்டுப் பூஜை வழிபாடுகள் தொடர்ந்தன.

தற்போது ஆகம முறைப்படி திருக்கோயில் அமைக்கப் பெற்று, விநாயகரைப் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் விய வருஷம் தை மாதம் 22 ஆந் திகதி (05.02.2007) திங்கட் கிழமை திருதியைத் திதியும், பூர நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9.32 மணி முதல் 11.08 மணிவரையிலான மீன லக்ன சுப முகூர்த்த வேளையில் ஸ்ரீ முன்னேஸ்வர ஷேத்திர(வயல்) விநாயகப் பெருமானுக்கு புனராவர்தன ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது

மகா கும்பாபிஷேகத்துக்கான விஷேட கிரியைகள் ஐந்து தினங்கள் சிறப்பாக இடம் பெற்றன.

கும்பாபிஷேகக் கிரியைகளின் முதலாம் நாள்(01.02.2007) வியாழக்கிழமை விநாயகர் வழிபாடு, பிரம்மச்சாரிய பூஜை, ஆசார்ய வர்ணம், மகாகணபதி ஹோமம், திரவ்ய சுத்தி, திரவ்ய விபாகம், ஸ்தலவிருட்ச பூஜை, பேரீதாடனம், லட்சுமி ஹோமம், கிராமசாந்தி, பிரவேசபலி, ஆகிய கிரியைகள் இடம் பெற்றன.

இரண்டாம் நாள்(02.02.2007) வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாடு, நவக்கிரக ஹோமம், நவக்கிரக பிரீதி பூஜை, ரக்சோக்ன ஹோமம், திசாஹோமம், மூர்த்தி ஹோமம்.மண்டுக பத வாஸ்து சாந்தி ஆகிய கிரியைகள் இடம் பெற்றன.

மூன்றாம் நாள்(03.02.2007) சனிக்கிழமை மிருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம், பிரசன்னாபிஷேகம்.பிரசன்ன பூஜை, ஸ்தூபி ஸ்தாபனம், தீப ஸ்தாபனம். கடஸ்தாபனம், கலாகர்ஷணம், கும்ப யாக சாலைப் பிரவேசம், யாக பூஜை, அக்கினிகார்யம், தீபாரதனை, வேதஸ்தோஸ்திர, திருமுறை பாராயணம், பிம்பஸ்தானம், அஷ்டபந்தனம் ஆகிய கிரியைகள் இடம் பெற்றன.

நான்காம் நாள்(04.02.2007) ஞாயிற்றுக்கிழமை பக்தர்கள் விநாயகருக்கு எண்ணெய் காப்புச்சாத்தும் தைலாப்பியங்கம், விசேட திரவிய ஹோமம், தீபாரதனை, மூலமந்திர ஹோமம், வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், பிம்ப சுத்தி, கௌதுக பந்தனம், நியாசம், ஸ்பர்சாகுதி, தீபாராதனை ஆகிய கிரியைகள் இடம் பெற்றன.

ஐந்தாம் நாள்(05.02.2007) திங்கட்கிழமை விநாயக வழிபாடு, புண்ணியாக வாசனம், யாகபூஜை, மஹாபூர்ணாகுதி, அக்னி பூர்த்தி, சம்யோஜனம், அந்தர் பலி, யாத்ரா தானம், கும்ப உத்தாபனம், சர்வமங்கள சந்தன வீதி பிரதட்சிணம், ஸ்தூபி கும்பாபிஷேகம், மூல மூர்த்தி மகா கும்பாபிஷேகம், சான்னித்திய பிரார்த்தனை, தசதர்சனம், யஜமான அபிஷேகம், மகேஸ்வர பூஜை ஆகிய கிரியைகள் இடம் பெற்றன. பகல் 12 மணிக்கு பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. நிறைவாக மாலை 6.00 மணிக்கு வைரவ பூஜை இடம் பெற்றது.

கும்பாபிஷேக வைபவத்தைத்தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகப் பூஜை இடம் பெற்றது. 25.03.2007 அன்று மண்டலாபிஷேகப் பூர்த்தி நடை பெற்று, பகல் 12 மணிக்கு பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

ஸ்ரீ முன்னேஸ்வரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஷேத்திரவிநாயகர் ஆலயத்தில்.
இடம் பெற்ற முக்கிய பூஜை வழிபாடுகள் பின்வருமாறு,
ஒவ்வொரு மாதமும் சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி ஆகிய தினங்களில் விநாயகப் பெருமானுக்கு விஷேட பூஜை, புனஸ்காரங்கள் இடம் பெறுகின்றன.

மஹா சிவராத்திரி பகல் பூசை 16.02.2007 அன்று இடம் பெற்றது. ஸ்ரீ ருத்ரம். சமகம். ஸ்ரீ சூக்தம் துர்க்கா சூக்தம் ஆகியவற்றின் பாராயணம் இடம் பெற்றது. தொடர்ந்து ஸ்ரீசிவ சகஸ்ரநாம வில்வார்ச்சனை இடம் பெற்றது. பின்னர் பதினொறு கலச ஸ்நபநாபிஷேகம், பூஜை, புனஸ்காரங்கள் இடம் பெற்றன.

ஸ்ரீ முன்னேஸ்வரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஷேத்திரவிநாயகர் ஆலயத்தில்.
சித்திராபௌர்ணமியன்று ( 02.04.2007 ) மகா சங்காபிஷேகம் இடம் பெற்றது. இந் நாட்டில் சமாதான சகவாழ்வு நிலை பெறுவதற்காக இக்கிரியை இடம் பெற்றது.
24.08.2007--28.08.2007 ஆகிய ஐந்து தினங்கள் ஸ்ரீ வாக்ஞா கல்ப மஹா கணபதி யாகம் (ஹோமம்) இந் நாட்டில் சமாதான சகவாழ்வுக்காக இடம் பெற்றது. மகா கணபதியின் மூல மந்திர ஜெப ஹோமம் ஆயிரத்தெட்டு ஆகுதிகளுடன் இந்த ஸ்ரீ வாக்ஞா கல்ப கணபதி மந்திர யாகம் (ஹோமம்)

ஆரம்பமாகியது. இந்த யாகத்துக்குள்ள விஷேடமான மந்திரங்களான மகா மந்திரம் எனக் கருதப்படும் காயத்ரி மந்திரமும் ஸ்ரீவித்யா மந்திரமெனப்படும் மந்திரராஜம் என்ற பஞ்சதசி மந்திரமும், ஸ்ரீவித்யா ஆராதனைக்கு இட்டுச் செல்லும் மாலா மந்திரமும் சேர்ந்த ஆகுதிகள் இடம் பெற்றன. ஸ்ரீ வாக்ஞா கல்ப கணபதி மந்திர யாகம் (ஹோமம்) நான்கு பர்யாயங்களைக் (அத்தியாயங்களைக்)கொண்டது. ஒவ்வொரு பர்யாயமும் பதினான்கு மந்திரங்களைக் கொண்டதாகும்.ஸ்ரீ வித்யா கணபதி, மகா கணபதி, மஹாத்திரிபுரசுந்தரி,அமிருதருத்திரர்,சம்வாதாக்கினிஎன்றதெய்வ மூர்த்தங்களுடையஆவாகனத்துடன்சேர்ந்த ஐந்து ஆவர்த்திகளைக் கொண்ட ஜப ஹோமம் இடம் பெற்றது.

06.03.2008 அன்று **மஹா சிவராத்திரி பகல் பூசை** இடம் பெற்றது. ஸ்ரீ ருத்ரம். சமகம். ஸ்ரீ சூக்தம் துர்க்கா சூக்தம் ஆகியவற்றின் பாராயணம் இடம் பெற்றது.இதனைத் தொடர்ந்து ஸ்ரீசிவ சகஸ்ரநாம வில்வார்ச்சனை இடம் பெற்றது. பின்னர் பதினொரு கலச ஸ்நபநாபிஷேகம், பூஜை, புனஸ்காரங்கள் இடம் பெற்றன.

ஸ்ரீ முன்னேஸ்வரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஷேத்திரவிநாயகர் ஆலயத்தில். 13.09.2008 அன்று **மகா சங்காபிஷேகம்** இடம் பெற்றது. இந் நாட்டில் சுபீட்சம்,. சமாதான சகவாழ்வுக்காக நிலை பெற வேண்டி இக்கிரியை இடம் பெற்றது.

**விநாயக வழிபாடு**

விநாயகன் என்றால் தனக்கு மேல் நாயகன் அற்றவன் என்று பொருள்படும். "ஆரும் அளவறியாத ஆதியும் அந்தமுமான" எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளான விநாயக திருவுருவம் இதைக் காட்டுகிறது. பரந்த வெளியில் ஓங்கார நாதத்திலிருந்து அண்ட சராசரம் தோன்றியது என்பதை ஓங்கார வடிவான விநாயகரின் திருவுருவம் விளக்கி நிற்கின்றது.

அண்ட சாராசரமெங்கும் நீக்கமற நிற்கும் பொருள் விநாயகரே என்பதை விநாயகரது திருவுருவம் விளக்குவதாக அப்பர்,

"மறி கடலுங் குலவரையும் மண்ணும் விண்ணும் திருந்தொளிய தாரகையுந் திசைகளெட்டுந்
திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறவுமாய பெருந்தகையை" எனச் சிறப்பித்துப் பாடுகிறார்.

சுந்தரர், எல்லா உயிர்களிடத்தும் விநாயகர் நீக்கமற நிறைந்துள்ளமையை,

"ஒரு மேக முகிலாகி ஒத்துலகந் தானாய் ஊர்வனவும் நிற்பனவும் ஊழியகளுந் தானாய்
பொருமேவு கடலாகிப் பூதங்கள் ஐந்தாய்" எனப் போற்றுகின்றார்.

வட மொழி மூலநூலாகிய ரிக் வேதத்தில் கணங்களின் தலைவனாகிய கணபதியைப் பற்றிய விபரம் உள்ளதால் விநாயக வழிபாடு வேத காலத்திலேயே இருந்திருக்கலாமென அறிஞர் கருதுவர். தமிழ் நாட்டில் விநாயகர் வழிபாடு சதுக்கப்பூத வழிபாட்டிலிருந்தே தோன்றியது என்பது சிலரது கருத்தாகும்.

விநாயகரின் தோற்றம் பற்றி வடமொழிப் புராணங்களாகிய *சிவபுராணம், மச்சபுராணம், வராகபுராணம், கந்த புராணம்* போன்றவை விரிவாக விளக்குகின்றன. இவ்வாறு பெருமை பெற்ற விநாயகர், தெருமுனை, குளக்கரை, ஆற்றங்கரை, மரத்தடி, கோயில், கொட்டகை, பாடசாலை போன்ற பிரதிஷ்டை செய்யப்பட்ட இடத்திலிருந்து அனைவருக்கும் அருள்பாலிப்பார்.

**விநாயகரின் குறியீட்டு முக்கியத்துவம்**

இந்து சமயத்தில் விநாயகர் (கணேசர்) அனைவராலும் இலகுவில் இனங்கண்டு அறிந்து வணங்கப்படும் கடவுளாவார். சமஸ்கிருதத்தில் (புயு ) என்பது புத்தி என்ற கருத்தையும் "நயே" என்பது அழ்ந்த அறிவு என்ற கருத்தையும் (ஏனைலெயயெ) கறிக்கின்றது. எனவே கணேசர் என்னும் பரம்கூரிய புத்தியையும் ஆழ்ந்த அறிவையும் குறிக்கும் கடவுள் எனக் கருதப்படுகின்றது. கணேசர் மனித சரீரத்துடனும் யானைத் தலையுடனும் இருப்பதாக குறிக்கப்படுகின்றது. விநாயகர் எதிர்ப்புக்களையும் தடைகளையும் அழித்து, எடுக்கும் காரியங்களின் நடைமுறைச்சிக்கல் நிலைகளை நீக்கி எடுத்த கருமத்தின் நோக்கம் இனிதே நலமாக முடிவுறச் செய்யும் பேற்றினைக் கொடுப்பவர் எனக் கருதப்படுகின்றார்.

விநாயகரின் விக்கிரகத் தத்துவம் பல அரிய தத்துவார்த்தங்களையுடைய ஒரு குறியீட்டு வடிவமுடைய விநாயகரின் திருமேனியானது பலவிதமாறு பட்ட விளக்கங்களையும் வேறுபட்ட குறியீட்டு அமைப்புகளையும் கொண்டுள்ளது. பூரணமான ஒரு அறிவுணர்வுடைய செயலின் பெறுபேற்றை அடையக் கூடியதாக அவ்வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. அதர்வ ரிஷிகளால் இயற்றப்பட்ட "கணேச உபநிட"த்தில் விநாயகரின் வடிவ அமைப்புப் பற்றிய விளக்கம் உண்டு. விநாயகரின் உருவம் முதலில் உண்டாகிய ஒலியின் சப்த அலையாகிய "ஓம்" என்றும் பிரதிஜநிதிப்படுத்துகின்றது. சக்தியும் சிவமும் இணைந்த போது, ஒளியும் ஒலியும் தோன்றின. இத்தோற்றமே கணேசரின் தோற்றம் எனக் குறிக்கப்படுகின்றது. வேகத்துக்கும் அமைதிக்கும் இடையிலான பூரண சமநிலையை சுயவீரியம் அசையும் சக்திகளுக்கும் இயக்க பூரண சம நிலையையும் குறிப்பதாகக் கருதப்படுகின்றது விநாயகரின் தோற்றம் சத்தியத்துக்கும் மாயைக்கும் இடையிலான வேறுபாட்டை ஊன்றி உணர்ந்தறியும் ஆற்றலையும் நல்கும்.

கணபதியைத் துதிக்கும் தோத்திரம் வேதத்தின் கணபதி பிராத்தனைப் பகுதியில் காணப்படுகின்றது. இத்தோத்திரம் பக்தர்களால் அதிக அளவில் ஓதப்படும் வேத மந்திரமாகும்.

"ஓம் கணானாம் துவா கணபதிகும் ஹவா மஹே

கவீனகவினா முபனஸ் வரஸ்றவஸ்தமம்

ஜேஸ்டரரிம் ப்ரஹமனாம் ப்ரஹ்மனஸ்பத

ஆனஹ் ஸ்றுண்வன் ஹுுதிபி சீதசாதனம்"

கணேசரின் திருவுருவம் மிகவும் உயர்ந்த தத்துவங்களைக் குறிக்கும் பருத்த வயிறும், நான்கு கரங்களும் கொண்டு எலியுடன் இருப்பதாககருங்கல்லினாலும் உலோகத்தாலும் வடிவமைக்கப்படும்

பொதுவாக உலோகத்தில் வார்க்கப்படும் எழுந்தருளி விக்கிரகங்கள் நின்ற போலத்தில் அமைக்கப்படுவது வழக்கம். கருங்கல்லின் வடிவமைக்கப்படும் போது சிலாவிக்கிரகங்களில் ஒருகாலை உயர்த்தி மடக்கி வீராசனத்தில் இருப்பதாக அமைக்கப்படுவது வழக்கம் சில கணேசவடிவங்களில் ஆறு, உட்டு, பத்து, பன்னிரண்டு பதின்நான்கு கரங்களுடனும் அவை ஒவ்வொன்றிலும் ஆயுதங்களோ அல்லது வேறுபட்ட குறியீட்டுப் பொருட்களையோ வைத்திருப்பதாகச்சித்தரிக்கப்பட்டிருக்கும். இவை ஒவ்வொரு கரத்திலும் வெவ்வேறு பொருட்களாக அமையும். இவ்வாறு பல்வேறு பொருட்களைச்சுட்டுவதாக இருப்பவை ஐம்பத்தேழு என ஆகமம் கூறுகின்றது. எனினும் கணேசரின் வடிவம் இரண்டு கரங்களுடனும் காணப்படுவது மிக அபூர்வமாகவே உள்ளத.

இந்து சமய விக்கிரகங்களும் சிலைகளும் பல கரங்களுடனும் ஆயுதங்களுடனும் காண்பிபக்கப்பட்டிருக்கும் காரணம் மனிதர்களை விட கடவுளர் அதிக ஆற்றலும் வல்லமையும் கொண்டதை வலியுறுத்துவதற்காகவே எனலாம் வு.யு கோபிநாத் ராவ் என்பவரால் எழுதப்பட்ட "இந்து விக்கிரகவியலில் மூலப்பொருள்கள்" என்னும் நூலில், அவர் பின்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் கேத்திரகணித வல்லுனர்களுக்கு கணித நுட்பங்களைக் குறிக்கும் வரிவடிவங்கள் எவ்வாறு அமைகின்றதோ அவ்வாறே இந்து சமய வழிபாட்டைக் கடைப்பிடிப்பவர்களுக்குஇந்து விக்கிரகங்கள் அமைகின்றன.

**விநாயகர் நற்காரியங்களுக்கான கடவுள்**

கணேசப்பெருமான், லௌகீக, ஆத்மீகதடைகளை நீக்கி நல்லதிஷ்டத்தை நல்குபவர். எனவே நாம் மேற்கொள்ளுதம் செயல்களின் ஆரம்பத்தில் கணேசப்பெருமானை ஆராதித்து அவருடைய கிருபையினால் தடைகள் விலகி மனிதன் முயற்சிகள் பயனுள்ளதாக அமைகின்றன.

கணேசப் பெருமான் சுட்டும் குறியீடுகளின் பொருள்

உருவம் அற்றதும் நாமங்கள் அற்றதுமாய் கொள்ளப்படும் பரப்பிரம்மத்துக்கு பல்வேறுபட்ட பெயர்களையும் திருவுருவங்களையும் கொடுத்து இந்துக்கள் வழிபாடாற்றுகின்றனர். இறைவனின் இவ்விதமான தன்மைகள் பல்வேறு வடிவங்களினால் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இறைமூர்த்தங்களின் தத்துவார்த்த வெளிப்பாட்டை அறிந்து மனிதன் வழிபடுவதற்காக யந்திர தகடுகள் (மந்திரங்கள் எழுதப்பட்ட) உருவாக்கப்பட்டன. இம் மூர்த்தங்கள் கடவுளரை தொழுது வழிபட ஏதுவாக இருப்பதாகவே இந்துக்கள் கருதுகின்றனர். இக்கருத்தை விஷ்ணு சம்ஹிதையில் (29ம் அத் ஏ55-7) பின்வருமாறு கூறப்பட்டுள்ளது."கடவுளை உருவமில்லாமல் எவ்வாறு தியானிக்க முடியும்? கடவுளுக்கு உருவம் இல்லாவிடின் தியானிக்கும் போது மனதை எங்கே நிலை நிறுத்த முடியும்? அலைபாயும் மனதை ஓரிடத்தில் நிறுத்தல் தியானத்தின் முக்கிய நோக்கமாகையால், தியானிப்பவர், மனத்தை ஒருநிலைப்படுத்த ஓர் உருவம், இன்றியமையாததாகின்றது. உருவமில்லையேல் மனம் அலைபாய்ந்து நழுவிச் சென்று விடுவது இயல்பு. ஆகையால் அறிவாளிகள் ஏதாவது அர்த்தமுள்ளதோர் உருவத்தை மூலாதாரமாக வைத்து தியானிப்பர். கடவுளைத்தியானிக்க ஆதாரமான ஒரு பொருளாகவே திருவுருவம் கருதப்படுகின்ற தல்லாமல் உண்மையானதல்ல"

இந்துக்களின் சமயத்திலும் கலைகளிலும் குறியீடுகள் முக்கியமானதோர் பங்கை வகிக்கின்றது. உலகத்தில் உள்ள சமயநெறிகளில் இந்து நாகரிக சமய வளர்ச்சித் தொடர் மிகவும் பழமைவாய்ந்தது. வரலாறு எழுதப்பட்டகாலத்துக்கு முன்னரே தோன்றி வளர்ந்த தொடர் ஐதீகம் உடையது இந்து நாகரிகம். "அகம் பரம்மாஸ்மி" (நானே பிரம்மமாய் இருக்கிறேன்), எல்லாவற்றினதும் சாராம்சமாயுள்ளேன், "தத்துவம் அஸி" (நீ அதுவாக இருக்கிறாய்) பிரம்மம் ஒன்றே இருக்கின்றது அது எல்லாவற்றின் சாரமாக உள்ளது. "அகம் ஸா" (நானே அவன் பிரம்மம்.'. தனி மனிதன் ஒருவன் ஆத்துமாவே (ஆன்மா) அது பௌதீக உடலில் சுற்றி அடைக்கப்பட்டுள்ள" இந்த தத்துவஞானப்பொருள் உணர்த்தும் உண்மைகளை, உண்மையை என்று ஏற்றுக்கொள்ளாத அறிவிலிகளின் மனம் இனம் கண்டு அறியும் ஆற்றல் இன்மையால் அவர்களால் விளக்கம் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. மனதின் எண்ணத்தெளிவே மேற்கூறப்பட்டுள்ள வாக்கியங்களின் மெய்ப்பொருள் குறியீட்டு முறையில் அமைக்கப்பட்ட வடிவங்களில் தான் இந்த வேத உபநிடத தத்துவார்த்த உண்மைகள் மறைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு தத்துவக் கதைகள் மூலம் மக்களுக்கு வெளிப்படுத்தப்படுகின்றன. இத்தகைய தத்துவார்த்தப் பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருத்தலின் காரணமாக அவை அஞ்ஞான இருளில் அபசாரப்படுத்தப்பட்டிருத்தலின் காரணமாக அவை அஞ்ஞான இருளில் அபசாரப்படுத்தப்படாமலும் காலவெள்ளத்தில் அழிந்து போகாமலும் நிலைத்து நிற்கின்றன. உரியகால வேளைகளில்சத்தியதரிசினிகளால் சொல்லப்பட்டதத்தவார்த்தங்களை இந்து மதமல்லாத தத்துவக்கோட்பாடு உடையார்களின் பிரசாரங்களை மிஞ்சிய, உயர்வானதோர் தத்துவார்த்தமுள்ள கோட்பாடும் இருந்திருக்கின்றது என்றும், அக்கோட்பாடு என்றும் நிலைத்திருக்கத்தக்கது என்றும் பிற்கால இந்து தத்துவ தரிசினிகளால் எடுத்துக்காட்டி, இந்து சமய மேன்மையான பிரசாரத்தை நடைமுறைப்படுத்துவதனால் அதை அழிவிலிருந்து காப்பதற்கேயாகும். எல்லாம் வல்ல இறைவனுக்கு உருவம் இல்லை. ஆயினும் எல்லா உருவங்களிலும் அந்த இறைவனே சான்னித்தியமாக உள்ளான் இந்துக்களின் தெய்வங்கள் பல்வேறு தொழிற்பாடுகளையும், குணாதிசயங்களையும், பார்வைகளையும் உடையனவாக சித்தரிக்கப்பட்டிருப்பினும் அவை யாவும் ஒரேயொரு மேலாண்மையுள்ள சத்தியப் பொருளாகிய பிரமத்தை அறிந்து அதனுடன் ஒன்றி இரண்டறக் கலந்து பேரின்பத்தை அனுபவிப்பதற்கே தலையாய நோக்கமாகும்.

**விநாயகப் பெருமானின் பல்வேறு சரீரத் தோற்ற அமைப்புகளும் அவற்றின் முக்கியத்துவங்களும்.**

பூரணப் பொலிவான சீரிய கோட்பாடுகளும் ஒருங்கே அமைவுறப்பெற்ற மூர்த்தமே இந்து முனிவர்களால் கண்டருளப்பட்ட கணேசப்பெருமானின் கணேசஉருவம் இவ்வுயர்வான மூர்த்தத்தின் தத்துவார்த்த நம்பிக்கைகள் ஆழமான ஆன்மீக முக்கியத்துவம் உடையதாகும். "ஓம்" என்னும் குறியீட்டையுடைய கணேசப் பெருமான் "ஓங்காரன்" என்றும் வரையறுக்கப்பட்ட நாமத்தை உடையவர். இதன் பொருள் "ஓம்" என்ற உருவத்தைக் குறிப்பவர் என்பதாகும். பிரபஞ்சம் முழுவதையும் தன்னுள் அடக்கியுள்ள சரீரியாக உருவம் பெற்றவர். பிரபஞ்ச உருவத்தின் அடிப்படையாகக் கருதப்படுவர்

“விஸ்வாதார, ஜகதோதார” பெரிய யானைத் தலை, ஞானம், நேர்மை, மௌனம், விநயம், புரிந்துணர்தல், பகுத்தறியும் அறிவாற்றல் ஆகியவற்றைக் குறிக்கும்.

அகன்ற வாய், மனிதனின் இயல்பான ஆசையான வாழ்க்கையின் எல்லா இன்பங்களையும் அனுபவிக்குக விளையும் அவாவைக் குறிக்கின்றது.

அகன்ற இரு பெரிய செவிகள் ஆன்மீக உண்மைகளை மீட்டறிதலையும், உதவிதேடி வருவோருக்கு அவர்களின் வேண்டுகோளைக் கேட்டு உதவி செய்யும் ஆற்றலையும் குறிக்கின்றது. மற்றவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து கொள்வதுடன் ஒருவரது எண்ணங்களை அலசி ஆராய்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டியதையும் அச்செவி குறிக்கின்றன. செவிகள் அறிவாகிய கேள்விச் செல்வத்தை அடைய உபயோகப்படுகின்றன. பெரிய செவிகள், இறைவனைப் பற்றிய கேள்விச் செல்வத்தை பெறும்போது அறிவினால் முற்றுணர்தல் பெறப்படுகின்றது.

விநாயகரின் வளைந்த தும்பிக்கை உண்மைக்கும் மாயைக்கும் இடையே பகுத்தறியும் ஆற்றலைக் குறிப்பதாக உள்ளது. துதிக்கை பாரிய மரங்களையும் வேரோடு பிடுங்கி எடுக்கும் ஆற்றலையுடையதோடு மட்டுமன்றி சிறிய மெல்லிய ஊசியையும் தரையிலிருந்து இனங்கண்டு பொறுக்கியெடுக்கும் வியக்கத்தக்க வல்லமையையும் கொண்டுள்ளது. இவ்வாறே மனிதர் வாழ்க்கையில் நிகழும் புற நிகழ்ச்சிகளின் தாக்கங்களையும், அகநிகழ்ச்சித் தாக்கங்களையும் இனங்கண்டு ஆராய்ந்து பார்க்கும் அறிவை உணர்த்தி வாழும் வழியைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தைக் குறிக்கின்றது மனிதனின் தனிப்பட்ட குணமான ஞாம், உணர்ச்சி ஆகிய இரண்டையும் கணேசரின் இருதந்தங்கள் குறிக்கின்றன.

இரண்டு தந்தங்களில் ஒன்று ஒடியாதது. அது கணேசரின் யாவற்றை வெற்றிக் கொள்ளும் ஆற்றலை குறிப்பாக இருமைப்பண்புகளையும், உணர்வை அடக்கி ஆண்டு வெல்லும் தன்மையைக் குறிக்கின்றது. ஒடிந்த தந்தம் இருமைப்பண்பு மயக்கத்தை உடைத்து ஊடறுத்து வெற்றிக்கொள்ளும் ஆற்றலைக் குறிக்கின்றது. மனிதன் இத்தகைய ஆற்றலை வளர்த்துப் பெருக்கி பூரணத்துவத்தை ஆன்மாவினால் அடைய முடியும் என்பதைக் காட்டுகிறது. நன்மை யானையின் இரு தந்தங்களும் தீமை ஆகிய இரு மாறுபட்ட கருத்துக்கள் மனிதமனத்தில் அடிக்கடி தோன்றுவதைச் சுட்டும் உண்மை, கற்பனை, திறமை, சந்தர்ப்பவாதம் ஆசை ஆகியவை தந்தங்களைப் போல மனதிலிருந்து உந்தி எழுவதால் மனதையும் அதன் தொழிற்பாட்டையும் தவறான வழியில் செலுத்தி ஆபத்தில் ஒருவரை ஆழ்த்திவிடும் என்பதை விநாயகப் பெருமானின் தந்தங்கள் உணர்த்தும். எனவே தந்தங்களைக் காணும் போது மனத்தொழிற்பாட்டில் அடக்கமும் ஆளுமையும் கொள்ள முயலவேண்டும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். என்பதை வலியுறுத்தும் ஒரு அச்செயலூக்கத்துக்கான செயலைத் தொடக்க முன்னர் மனதால் சங்கற்பமெடுத்தல் அவசியம்.

இயல்பாகவே யானைக்குக் கண்பார்வை ஓர்வகையில் எமாற்றமளிக்கும் தன்மையாக அமைந்துள்ளது. அதாவது ஒரு பொருளை பார்க்கும்போது அதன் தோற்றம் உண்மையாக இருக்கும் பருமனிலும் பெரிதாகவே யானைக்குத் தோன்றும். இது ஒருவர் செல்வநிலையிலோ கல்விகேள்விகளிலோ பட்டம் பதவிகளிலே மேன்மை அடைந்தால் மற்றவர்களையும் யானையின் கண் பார்வையின்படி தன்னைவிட பெரியவர்களாகவும் மேன்மையுடையவராகவும் நினைக்க வேண்டும் என்பதாகும்.

ஒருவர் தனது அகம்பாவமான புகழ்ச்சியை தாழ்த்தியும் அடக்கமாகிய விநயத்தை வளர்த்துப் பெற்றுக்கொள்ள வேண்டும். கணேசரின் இடப்பாகம் உணர்ச்சியை வலப்பக்கம் நியாயபூர்வமான அறிவாற்றலையும் குறியீடாக சுட்டப்படுகின்றது.

விநாயக வடிவத்தில் வலது கால் மடித்து இடது காலின்மேல் வைத்திருப்பதை காட்டப்பட்டிருக்கும். இதன் பொருள் உலகாயதத்தில் தர்மமான எல்லைக்குட்பட்டு வாழும் முறையையும், ஆன்மீகமான வாழ்வின் முறையிலும் ஈடுபாடு உடையராக ஒவ்வொருவரும் விளங்க வேண்டும் என்பதாகும். உலகவாழ்வில் செம்மையாக வாழ ஆன்மீக வாழ்வு இன்றியமையாதது. உலக வாழ்வில் அறிவையும் நீதியான மனஉணர்வுகளையும் நாம் நன்கு கையாண்டு துன்ப அலைகளிலிருந்து மீள வேண்டும் விநாயகரின் நான்கு கரங்களும், மனம், புத்தி, அகம், பாவம், சித்தம் ஆகியவைகளை குறிக்கின்றன. எம் மனத்தில் உறையும் சுத்தாத்துமா இந்த நான்கு அந்தக்கரணங்களையும் இயக்கிக்கொண்டிருக்கின்றது.

இடது மேல் கரத்தில் தாங்கியுள்ள கோடரி ஆசைகளை, வெட்டிவிடும் தொழிலாகிய அவா.'. ஒழித்தலைக் குறிக்கின்றது. தடைகளையும் விக்கினங்களையும் தவிர்க்கவும் கோடரி உதவுகின்றது. கோடரியால், உண்மையானதும் நீதியானதுமாகிய வாழ்வினை தெரிந்து கொள்ளும்படி, தண்டப் பிரயோகஞ் செய்து வழிகாட்டுகின்றார்.

வலது மேற்கரத்தில் விநாயகர் தாங்கியிருக்கும் மாமரைமலர் மனித வாழ்வின் உள்ள இறுதி நோக்கத்தைக் குறிக்கின்றது. அதாவது இறைவனுடன் ஒன்றி உடனாகிய ஒப்பற்ற புனிதத்தன்மையான நிலையைக் குறிக்கும் நீரில் தாமரை வளர்ந்தாலும் நீர் அம்மலரின் தன்மையை மாசுப்படுத்துவதில்லை என்பதைப் போன்றது கீழ் இடதுகரத்தில் உள்ள சாட்டை வலிமையின் குறியீடாக இருக்கின்றது. பக்தர்களின் புனிதத்தை மேலோங்கச் செய்து என்றும் நிலைத்திருக்கு அழியா முத்தியாகிய ஆனந்தநிலைக்கு அழைத்துச் செல்வதைக் குறிக்கின்றது. லௌகீக இச்சைகளையும் பந்தங்களையும் நீக்கிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை சாட்டைக் குறிக்கின்றது.

கீழ் வலது கரம் பக்தர்களுக்கு அபயம் அளிக்கும்அபயகரமாக விளங்குகின்றது.

கணேசப்பெருமானின் பானை போன்ற தொந்தி அளவற்றதும் பெரியனவும் சிறியனவுமாகிய உயிர்களையும் அவைகளைத் தாங்கி நிற்கும் அண்டங்களையும் உள்ளடக்கியதாக திகழ்கின்றது. சுகம் துக்கம் ஆகிய இருமைப்பண்புகளைத் தன்னுள் வாங்கிக் கொண்டு உலகமக்களைக் காப்பாற்றுவதைக் குறிக்கின்றது.

அவரின் பானைவயிறு கணேசப்பெருமானின் திருமேனியில் சிவந்த அம்பரமும் மஞ்சல் நிற உத்தரியமும் அணிந்திருப்பதைக் காணலாம். மஞ்சல் நிறம் புனிதம், சாந்தி, சத்தியம் ஆகிய விழுமியங்களை குறிப்பதாகும். செம்மை நிறம் உலகின் தொழிற்பாட்டினைக் குறிப்பதாகும். மக்கள் உலகில் தத்தமது கடமைகளைக் குறைவற நிறைவு செய்து பூரண புனிதத்த்துவம் உடையவர்கள் விநாயகப் பெருமான் தமது பக்தர்கள் அந்தப் பெரு நிலையை எய்த வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.

எலி அகம்பாவம் என்னும் தற்பெருமையை குறிப்பது. எலியின் குணம் நல்ல பொருள்களை நன்னிக்கொறித்து, கிழித்து அவைகளின் நலனை இல்லாதது செய்து விடும் ஆற்றல் சாதாரண மனிதனிடமும் எலி இக்குணம் உண்டு. பெறுமதியான நன்மை தருவனவற்றை கெடுத்தல். சாதாரண மக்களிடம் இருப்பதால், அக்குணத்தை நீக்கி, ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதை உணர்த்த எலியைச் சரணாகதியடைந்த நிலையைக் குறிக்கும் பொருட்டுதனது பாதத்தின் கீழ் எப்போதும் வைத்திருக்கும் நிலையை உணர்த்த அகம்பாவத்தை அழிக்கும் குறிப்பை இது எடுத்துக்காட்டுகின்றது. மோதகங்களையும் பட்சணங்களையும் உண்ணும் போக்கினையுடைய எலி கணேசனின் முன்னிலையில் அவற்றை உண்ணாதிருத்தல், உலக இன்பங்களை மனம் மொழிமெய்களால் தீண்டாது மனிதர்கள் இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.

அகம்பாவமாகிய வேண்டாத குணத்தை நீக்கின் ஒருவரின் அறிவு முதிர்ந்து ஞானமாக மிளிரும். எலி அகம்பாவம், அறியாமை போன்ற பண்புகளை நாட்டம் கொண்டுள்ளது. இருளில், பொந்துகளில் பதுங்கும்படி அதன் இயல்பு இருப்பதைக் காணலாம். இந்தப்போக்கை மனிதன் ஒழித்து நல்லபடி வாழ வேண்டும் என்பதால் "மூஷிகவாகனன்" இருக்கிறார் எலியாகிய அகம்பாவம் ஆசாபாசங்களின் மறுவடிவம். அதை தன்சொற்படி அடங்கி பணியச்செய்து இருக்க செய்தமை, கணபதி மனத்தின் போக்கு விடாமல் ஒருவர் அறிவு, புத்தி வேறுபடுத்தியும் பகுத்தறிந்து கொள்ளும் ஆற்றல் என்பவைகளை விருத்தி செய்து கொள்ள வேண்டும் என்பதையேயாம். எலி உலக இன்பமாகிய மோதகத்தை) லட்டை தன் முன் கால்களால் பற்றி வைத்துக்கொண்டு தன் தலைவனாகிய கணேசனைப் பார்த்தபடி அந்தலட்டை சுவைக்காமல் காத்துக் கொண்டிருத்தல், விநாயகரின் உத்தரவில்லாமல் உலக இன்பங்களை துய்த்துச் சுவைக்கக் கூடாது என்பதே.

வட இந்தியாவில் கணபதி பிரம்மாவின் இரு மகள் , புத்தி, சித்தி திருமணஞ் செய்துள்ளவராக சித்தரிக்கப்படுகின்றார். புத்தி என்பது லௌகீக அறிவையும் சித்தி என்பது ஆன்மீக சக்தியையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. கணபதியை வணங்கி வருபவர்கள் சரஸ்வதி, இல'மி ஆகிய இருசக்திகளின் கடாட்சத்தை பெறுகிறார்கள். அறிவு, அவதானம் அமைதி அல்லது பொறுமை என்னும் அருங்குணங்கள் மேற்படி திரிமூர்த்தங்களாக உள்ள - கணபதி, இல'மி, சரஸ்வதி ஆகிய தெய்வீகத்துக்கு உட்படுகின்றார்கள், கல்வியும், செல்வமும், சாந்தியும் பெற்று பெருவாழ்வுடன் வாழ்வர்.

பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக சமயக் குறியீடுகளைப் பரிணாமம் பெற்று வந்ததன் அடிப்படையிலேயே கணபதியின் யானைமுக தோன்றியது உருவம் இந்தியாவில் குறியீட்டு முக்கியத்துவம் பெற்ற கணபதியைச் சித்தரிக்கும் பாவைகளோ, சிலைகளே, விக்கிரகங்களோ விநாயகரின் உண்மையான உருவத்தைப் பிரதிபலிப்பதாக எண்ணி வடியாமல் விநாயகர் உருவம்பௌதிகத்தன்மை கிளைக்கொண்டதாக அமையாமல் விக்கிரகவியல் அமைப்பின் உன்னத நிலையில் விநாயகரின் குணாதிசயங்களையும் தத்தவார்த்தங்களையும் தெய்வீக சாந்நித்யத்தையும் குறித்தே வடிக்கப்பட்டது. விநாயகரின் மூர்த்தம் மட்டும் அல்ல. இந்துக்கடவுள்களின் மூர்த்தங்களும் தத்துவார்த்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவையே.

தாய்லாந்தில் 7ம் 8ம் நூற்றாண்டு காலத்திலிருந்தே கணேச வழிபாடு இருந்து வந்துள்ளது அங்கு மக்கள் இவரை விக்னேஷ்வரி மகாவிக்னேஷ்வர் குஞ்சநானரா என்ற பெயர்களுடன் வழிபட்டனர். கம்போடிய மக்கள் பிரகெனேஸ், கணேஷா என்ற பெயருடன் விநாயகர் வியாபாரிகளாலும், யாத்திரிகளாலும் அரசியல் வாதிகளாலும், கலைஞர்களாலும் வழிபடப்பட்டார்.

தாய்லாந்தின் முக்கிய நகரான பாங்கொக்கில் உலக வியாபாரமையத்திற்கு முன்பாக இவர் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். வியாபாரம், பண்டமாற்று, அரசியல் காரணங்களுக்காக இவரை வணங்காமல் அக்காரணங்களில் நட்டமின்றியும், எடுத்தகாரியம் முட்டின்றியும் இனிதே நிறைவேற "சுவஸ்தி"யென்றமங்க அடையாளத்தையும் மலர்களுடன் ஊதுவர்த்தியையும் அர்ப்பணித்து தமது வேண்டுதல்களை சமர்பிக்கும்அந்நாட்டவர்களைக் காணலாம்.

கம்போடியாவிலும் வியற்நாமிலும் கணேசரை மிக முக்கியமான தெய்வமாகவே 7ம் நூற்றாண்டிலிருந்து 9ம் நூற்றாண்டு காலப்பகுதிவரை வணங்கி வந்தனர். இக்காலப்பகுதியில் வடிக்கப்பட்ட கணேசரின் கற்சிலை மூர்த்தங்களை அகழ்வாராய்ச்சியின் போது கண்டு எடுத்துள்ளனர்.

தென் வியட்நாம் நாட்டில் "சமபா"ப் பிரதேசத்தில் 7ம் நூற்றாண்டு வடிக்கப்பட்டதென்ற குறிப்புடன் ஏராளமான கணேச கற்சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே அங்கு விநாயக வழிபாடு அக்காலத்தில் பிரபல்யமாக இருந்ததென்பது தெளிவாகிறது. ஜப்பான் தேசத்திலும் கணேசனின் வழிபாடு கி.பி.806ல் நிலவியது என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். அவர்கள் விநாயகரை "ஷோடென்" அல்லது "ஷோரென்" அல்லது "விநாயக்ச" என்ற நாமங்களால் அழைத்தனர். கணேச புத்தர், நல்லதெய்வம் "டாய் - ஷோ டென்" (நல்ல பெரிய கடவுள்) அல்லது டென் - உன் வழிபடுகடவுள் என்று பொருள்படும் வகையில் கணேசரின் நாமங்கள் ஜப்பானிய மொழியில் பிரபலமடைந்தன. "பினாயக்கேதன்" என்றும் "கான்கிதம்" என்றும் பெயர்களும் அவருக்குண்டு. மிகப்பிரபலமான ஓர் ஆலயம் டோக்கியோவில் புராகோரமகவ என்ற ஊரில் புத்த பெருமானைவிட யப்பானிய மக்களால் வணக்கப்படும் கணேசர் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். ஜப்பானில் கணேசர் வழிபாடு "ஷின்கொன்" என்னும் கிரியை வழிபாடாக இடம்பெறுகின்றது. இதன் வழிபாட்டுப் பத்ததி சீனாதேசத்தில் பன்னெடுங்காலமாக நடைமுறையில் இருந்திருக்கின்றது.

சீனாதேசத்தில் ஓவியங்களிலும் சிலைகளிலும் கணேசரின் உருவம் காணப்படுகின்றது. இது சீன புத்த அடிப்படையானவாதத்துக்குப் புறம்பானதாகவே இருக்கின்றது. சீனர்களில் சிலர் கணேசரை குவனா - ஷிரியென் அல்லது "ஹோ தேய்" பெருவயிற்றையுடைய ஆந்தத்தைக் கொடுக்கும் கடவுள் எனப் போற்றி வழிபடுகின்றனர்.

விநாயக வழிபாடு, சீனாதேசத்தில் இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. சீன சமயநெறிப் புராணங்களிலும் நூல்களிலும் கணேசர் "பத்து அரசர்கள்" வரிசையில் ஒருவராகவும் சொல்லப்படுகின்றார். அத்தோடு சீன பௌத்த இலக்கியங்களிலும் மற்றும் தந்திரீக சமயச்சடங்குக் கிரிகைகளிலும் விநாயகரைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்தோனேசியாவில் பாலித்தீவுகளில் கணேசருக்கு பெரியகோயில்கள் கட்டப்பட்டுள்ளன. விநாயகர் "பிராகெநேஸ்" (ஸ்ரீ கணேஸ்) என்ற நாமத்துடன் வழிபடப்படுகின்றார்.

மியான்மாரில் கணேசருக்கு பழைய பெயர் நலஹுய்நாரி புர்ஹா என்றும் பர்மாவில் சில இடங்களில் "மஹாபையிமே" என்றும் கணேசப்பெருமானை வழிபடுகின்றனர். கம்போடியாவில் விநாயகரை விக்நேஷ, விக்நேஷ்வர என்னும் நாமங்களை, விக்கினங்களைக் களைபவர் அல்லது நீக்குபவர்" என்ற ரீதியில் வழிபடப்படுகின்றார்.

இந்தோனேசிய தீவுகளில் கணேச வழிபாடு மிகப் பிரபலமாகியுள்ளது. ஜாவா, சுமாத்ரா தீவுகளில் உள்ள கற்சிலைகள் 8ம் நூ ஆ எல்லோரோவில் உள்ள சிலைகளுடைய "பாணி" யில் அமைக்கப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கது.

மத்திய ஜாவாவில் உள்ள "கன்டி சுகூக்" என்னுமிடத்தில் நடனஞ்செய்யும் மூன்று உருவங்களில் மையமாக கணேசரின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இது 15ம் நூற்றாண்டில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றது.

திபேத்தியர்கள் விநாயகரை "ற்ஸ் - ஒஹ்ஸ்ப் டாக்" என தெரிந்து கொண்டுள்ளனர். (1ம் நூஆ திபேத்தில் கணேசரின் வழிபாடு மிகப் பிரலமாகியுள்ளது. இன்றுவரை திபேத்திய பௌத்த சமய கிரிகை முறைகளிலும் சமய நடைமுறைகளிலும் பௌத்த தந்திரீக முறையில் கணேசரை வழிபடுதல் இருந்து வருகின்றது. சிலாவிக்கிரமல்லாமல் வெண்கல (ஐம்பொன்) விக்கிரகங்களாயும் இருப்பதோடல்லாமல் கணேசரின் உருவம் "தங்கா" ஓவியங்களிலும் புத்தபிரானுக்கு பக்கத்திலேயே வரையப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

கிரேக்கர்கள் "ஜனுஸ்" என்ற நாமத்தால் கணேசரை வழிபட்டு, தாம் தொடங்கும் புதுக் கருமங்களின் ஆரம்பத்தில் அவருடைய கிருபாகடா'த்தையும் நல்லாசிகளையும் வேண்டுகின்றனர்.

கிரேக்க நாட்டில் ஜனவரி என்ற பெயருடன் உள்ள மாதம் "ஜனுஸ்" என்ற நாமத்தினால் இடப்பட்டதென்றும் ஜனஸ் "யானைத்தலையை" உடைய வடிவமுடையதென்றும் சில சமயங்களில் இரு யானைத்தலைகளை உடைய வடிவமாகவும் சித்தரிக்கப்படுகின்றார் அவர் என்றும் சொல்லப்படுகின்றது.

பொலினேசியர்கள் "லோனோ" என்னும் நாமத்தில் வழிபடும் தெய்வம் கணேசரே. மொங்கோலியாவில் "தொற்கறோ காஹன்" என கணேசரை வணங்குகின்றனர் திபேத்திலிருந்துதான் கணேஸ் வழிபாடு 12ம் - 17ம் நுஆ காலத்தில் பொங்கோலியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் "கார்ரோஸ்" என்னும் இடத்தில் கணேஸ்சரின் பளிங்குச் சிலை கண்டு எடுக்கப்பட்டது. கி.பி.500 நுஆல் இச்சிலை செய்யப்பட்டிருக்கின்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சிலர் கணேசரை பெண்தெய்வமாக - இயற்கை அன்னையாக வழிபடுவதாக கூறப்படுகின்றது.

இலங்கைத்தீவில் மிகப் பழைய விநாயர் சிலை மிகுந்தலை மலையில் கண்டகசைத்தியத்தில் காணப்படும் கணேஸ்வரின் சிலை (1ம் நூற்றாண்டு) சேர்ந்ததெனக் கொள்ளப்படுகின்றது.

(சமண நெறி) யில் மகாவீரருக்கு பக்கத்தில் கணேஸரையும் சில இடங்களில் எழுந்தருளச் செய்துள்ளனர். நேபாளத்தில் காட்மான்ட் பள்ளத்தாக்கில் நான்கு "பினாயல்" களின் அவதாரமாக - அசோக, சூரிய, சந்திர, பின்க்ஹ - எனவும் கணபதி காக்கும் தெய்வமாகவும், பௌத்த விகாரைகளின் பஜனைகளில் புகழ்ந்து பாடப்படுகின்றார். புத்த விகாரைகளிலும் கணபதிக்கு தனி கோயில் உண்டு.

முஸ்லிம் மக்கள் அதிகமாக குடியேறியுள்ள இந்தோனேசிய நாட்டில் கணபதியை தெய்வமாக வழிபட்டு புகழ்ந்து துதிப்பாடல்கள் பாடப்படுகின்றன. ஐரோப்பிய கல்விமான்கள் இந்தோனேசிய கணபதியை ஞானத்தின் தலைவர் என போற்றி வருகின்றனர்.

செய்வோர் அல்லாமல் எந்தெந்தக்கருவிகளை இயக்கி தொழில் செய்வோர் அந்தந்தக் கருவிகளைச் சுத்திகரித்து பூவும் பொட்டுமிட்டு, மாலைசாற்றி நிவேதனமாக பட்சனங்கள் முக்கனிகள் தாம்பூலம், பால் முதலானவைகளை தொழில் தெய்வத்துக்கு அர்ப்பணித்து தமது தொழில் மேன்மேலும் விருத்தியடைய வேண்டுமெனப் பிரார்த்தித்துக் கொள்ளும் மரபு இந்து சமயிகளிடம் நிலவுகின்றது.

नासदासीन्नो सदासीत्तदानीं नासीद्रजो नो व्योमा परो यत्
किमावरीवः? कुह कः शर्मन्न् अम्भः? किमासीद् गहनं गभीरम्...

-Hymn 129 of the **Rig Veda**

மஹாம்ருத்யுஞ்ஜயஸ்தோத்ரம்

த்யாநம்

சந்த்ரார்காக்நிவிலோசநம் ஸ்மிதமுகம் பத்மத்வயாந்தஸ்!
முத்ராபாஶம்ருகாக்ஷஸத்ரவிலஸத்பாணிம் ஹிமாம்ஶுப்ரப
கோடீந்துப்ரகலத்ஸுதாப்லுததமும் ஹாராதிபூஷோஜ்ஜ்வ
காந்தம் விஶ்வவிமோஹநம் பஶுபதிம் ம்ருத்யுஞ்ஜயம் பாவ

ருத்ரம் பஶுபதிம் ஸ்தாணும் நீலகண்டமுமாபதிம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 1
நீலகண்டம் காலமூர்த்திம் காலஜ்ஞம் காலநாஶநம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 2
நீலகண்டம் விரூபாக்ஷம் நிர்மலம் நிலயப்ரதம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 3
வாமதேவம் மஹாதேவம் லோகநாதம் ஜகத்குரும்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 4
தேவதேவம் ஜகந்நாதம் தேவேஶம் வ்ருஷபத்வஜம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 5
த்ர்யக்ஷம் சதுர்புஜம் ஶாந்தம் ஜடாமகுடதாரிணம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 6
பஸ்மோத்தூலிதஸர்வாங்கம் நாகாபரணபூஷிதம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 7
அநந்தமவ்யயம் ஶாந்தம் அக்ஷமாலாதரம் ஹரம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 8
ஆநந்தம் பரமம் நித்யம் கைவல்யபததாயிநம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 9
அர்த்தநாரீஶ்வரம் தேவம் பார்வதீப்ராணநாயகம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 10
ப்ரலயஸ்திதிகர்த்தாரமாதிகர்த்தாரமீஶ்வரம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 11
வ்யோமகேஶம் விரூபாக்ஷம் சந்த்ரார்த்தக்ருதஶேகரம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 12
கங்காதரம் ஶஶிதரம் ஶங்கரம் ஶூலபாணிநம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 13
கங்காதரம் மஹாதேவம் ஸர்வாபரணபூஷிதம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 6

அநாத: பரமாநந்தம் கைவல்யபதகாமிநி
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 14
ஸ்வர்காபவர்கதாதாரம் ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகாரணம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 15
கல்பாயுர்த்தேஹி மே புண்யம் யாவதாயுரரோகதாம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 16
ஶிவேஶாநாம் மஹாதேவம் வாமதேவம் ஸதாஶிவம்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 17
உத்பத்திஸ்திதிஸம்ஹாரகர்தாரமீஶ்வரம் குரும்
நமாமி ஶிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி 18

பலஶ்ருதி

மார்கண்டேயக்ருதம் ஸ்தோத்ரம் ய: படேச்சிவஸந்நிதௌ
தஸ்ய ம்ருத்யுபயம் நாஸ்தி நாக்நிசௌரபயம் க்வசித் 19
ஶதாவர்த்தம் ப்ரகர்தவ்யம் ஸங்கடே கஷ்டநாஶநம்
ஶுசிர்பூத்வா படேத்ஸ்தோத்ரம் ஸர்வஸித்திப்ரதாயகம்
ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ த்ராஹி மாம் ஶரணாகதம்
ஜந்மம்ருத்யுஜராரோகை: பீடிதம் கர்மபந்தநை: 21
தாவகஸ்த்வத்கத: ப்ராணஸ்த்வச்சித்தோ அஹம் ஸதா
இதி விஜ்ஞாப்ய தேவேஶம் த்ர்யம்பகாக்யமநும் ஜபேத்
நம: ஶிவாய ஸாம்பாய ஹரயே பரமாத்மநே
ப்ரணதக்லேஶநாஶாய யோகிநாம் பதயே நம: 24
இதி ஶ்ரீமார்கண்டேயபுராணே மார்கண்டேயக்ருத
மஹாம்ருத்யுஞ்ஜயஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

